**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, ALANGUDI**
**Deposition of witness**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**CC No. 112 /2023**
**Deposition of witness for PW.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சமுத்திரராஜன் | **வயது** | : | 59 |
| **தகப்பனார் பெயர்** | : | வேலுச்சாமி | **தாலுகா** | : | சென்னை |
| **கிராமம்** | : | சோலிங்கநல்லூர் | **தொழில்** | : | உதவி ஆய்வாளர் ஓய்வு |

Solemnly affirmed by Selvi.B.Sendhurdevi, Examiner of this court in accordance with the provisions of Act X of 1873.
**(A1 to A5 Absent. Petition filed u/s.317 Crpc and allowed. Counsel Present)**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aadhaar Card of Witness verified.**

**<u>சாட்சியானர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:</u>**

**1.** நான் புதுக்கோட்டை மாவட்டம், காரையூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த **2023**ஆம் வருடம் பணி ஓய்வு பெற்று தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். கடந்த **05.10.2022**ஆம் தேதி சம்மட்டிவிடுதி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் என்பவர் நிலையபொறுப்பில் இருந்தபோது முத்துசாமி, த/பெ. மலையாண்டி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று நிலையக்குற்ற எண். **157/2022** இதச பிரிவு **379** ன் கீழ் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார். சிறப்பு உதவி ஆய்வளார் ஆறுமுகம் என்பவரால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.**5**ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் **05.10.2022** அன்று **17.00** மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராமசாமி, மாரியப்பன் ஆகியோர் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வைமகசர் ஆகியன தயார்செய்துள்ளார். சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் என்பவரால் தயார் செய்யப்பட்ட மாதிரி வரைபடம் அசாஆ.**6**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2.** பின்னர் பட்டியல் சாட்சிகள் **1** முதல் **7** வரையான சாட்சிகளை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்துள்ளார். வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் சம்மட்டிவிடுதி காவல்நிலைய குற்ற எண்.**148/2022** என்ற வழக்கில்

புதுக்கோட்டை மாவட்ட சிறையில் இருந்த எதிரிகளை **11.01.2023**ஆம் தேதி சம்பிரதாய கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். சம்மட்டிவிடுதி காவல்நிலைய குற்ற எண்.**148/2022** என்ற வழக்கில் **1**வது எதிரி அய்யப்பன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின்போது சாட்சிகளாக இருந்த ராமசுப்பிரமணியன் மற்றும் சரத்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **1**ஆம் எதிரி அய்யப்பன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை நகலில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.**7**ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்மட்டிவிடுதி காவல்நிலைய குற்ற எண்.**148/2022** என்ற வழக்கில் கைப்பற்றப்பட்ட இந்த வழக்கில் தொடர்புடைய **3** வெள்ளாடுகளை படிவம் **91**இன் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். படிவம் **91** அ.சா.ஆ.**8**ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.**9**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**3.** வழக்கு கோப்பினை தொடர்புலன்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். நான் சாட்சிகளை விசாரணை செய்தபோது அவர்கள் சிறப்பு உதவி ஆய்வாளரிடம் கூறியதுபோல் கூறியதால் மறுவாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவு **379**இன் கீழ் **15.06.2023** அன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று எனது விசாரணையில் தெரிந்துக்கொண்டேனா என்றால் **05.10.2022** அன்று கொடுக்கப்பட்டது. நான் காவல்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட ஆவணமான பார்வை மகஜர் ஆவணத்தில் **03.10.2022** அன்று பார்வை மகஜர் சாட்சிகளை விசாரணை செய்ததாக கையொப்பம் செய்து தேதி குறிப்பிட்டுள்ளார்கள் என்று தெரிந்துகொண்டேனா என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் வழக்கை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும், நிலைய சிறப்பு உதவிஆய்வாளர் சொல்லிதான் வழக்கின் விவரங்கள் தெரியும் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u> இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சி அதை படித்துப் பார்த்து சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு அவரால் கையொப்பமிடப்பட்டது.

(ஒம்/-எஸ்.சக்திநாராயணமூர்த்தி)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
ஆலங்குடி(பொறுப்பு).